# வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au

**ஆரம்பப்பள்ளி** போட்டி நடைபெறும் திகதி :**08 May 10 (1:30pm –3:00pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## தமிழ்ப் பாடசாலை

- நான் வென்றுவேத்வில் தமிழ்ப் பாடசாலையில் படிக்கிறேன்.
- நான் ஆரம்பப் பள்ளியில் படிக்கிறேன்.
- எனக்கு தமிழ்ப் பாடல்கள் பாடத் தெரியும்.
- தமிழில் கதைகள் சொல்லத் தெரியும்.
- தமிழில் பத்து வரை எண்ணத் தெரியும்.
- எனக்கு தமிழ்ப் பாடசாலைக்கு வர விருப்பம்.

நன்றி, வணக்கம்.

வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au

ஆண்டு 1 போட்டி நடைபெறும் திகதி : **08 May 10 (3:00pm – 4:30pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

# எனது குடும்பம்

- எனது குடும்பத்தின் தலைவர் அப்பா
- எனது குடும்பத்தின் தலைவி அம்மா
- என் வயதில் மூத்தவர்களை அண்ணா, அக்கா என்றும்
- என் வயதில் இளையவர்களை தம்பி, தங்கை என்று அழைப்பேன்.
- எனது குடும்பத்தில் தாத்தா, பாட்டி, மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி ஆகியோர் இருக்கின்றனர்.
- எனது குடும்பத்தில் எல்லோரும் அன்புடனும் பண்புடனும் வாழ்கின்றனர்.
- நான் என் குடும்பத்தில் நல்லொழுக்கம் மிக்கவராக இருந்து வீட்டையும், நாட்டையும் உயர்த்துவேன்.

நன்றி வணக்கம்

# வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au

**ஆண்டு 2** **போட்டி நடைபெறும் திகதி : 15 May 10 (1:30pm – 3:00pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

**அன்னையும் பிதாவும்**

- '**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**' என்பது ஆன்றோர் வாக்கு.
- எமக்கு நல்லறிவு புகட்டுவது பெற்றோர்களே.
- அவர்கள் எம்மை கண்ணும், கருத்துமாக வளர்க்கின்றனர்.
- எமது உடல், உள வளர்ச்சியில் அவர்கள் அதிக கவனம் செலுத்துகின்றனர்.
- எனவே எமது பெற்றோரை நாம் ஒரு போதும் மறத்தலாகாது.
- அவர்களின் மனம் மகிழும் வண்ணம் நாம் நடக்க வேண்டும்.
- எம்மை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரிற்கு எப்போதும் நன்றி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- வயது முதிர்ந்த காலத்தில் அவர்களை அன்புடன் பராமரித்தல் எமது கடமையாகும்.

நன்றி. வணக்கம்.

# வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au

**ஆண்டு 3** **போட்டி நடைபெறும் திகதி : 15 May 10 (3:00pm – 4:30pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## தமிழ் மொழி வாழ்த்து

நான் இன்று உங்கள் முன்னிலையில் தமிழ் மொழி வாழ்த்தைப் பற்றிப் பேசப் போகின்றேன்.

- நம் எல்லோருக்கும் பெற்ற தாய் உளர். அதே போல தாய் நாடும் உண்டு.
- ஒவ்வொரு இனத்திற்கும் தாய்மொழி உண்டு.
- நாம் நமது தாயைப் போற்றுவது போல நமது தாய்மொழியையும் போற்ற வேண்டும்.
- நாம் எத்தனை மொழியைப் படித்தாலும் போற்றுகிற மொழி தாய்மொழியாகத்தான் இருக்க வேண்டும்.
- அதற்காகத்தான் நாம் தமிழ்மொழி வாழ்த்துப் பாடுகின்றோம்.
- '**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா**' என்று பாரதியார் பாடியுள்ளார்.
- அதற்கிணங்க, நாமும் நம் தாய்மொழியாம் தமிழ்மொழியைத் தொழுது படித்திடுவோம்.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி என்று வாழ்த்திப் பாடி விடைபெறுகின்றேன்.

நன்றி. வணக்கம்.

# வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au

**ஆண்டு 4** போட்டி நடைபெறும் திகதி : **08 May 10 (4:30pm – 6:00pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## அன்பு

அன்பே கடவுள் என்று அன்பை இறைவனுக்கு சரிசமமாக எல்லா மதங்களும் கூறுகின்றன. அந்த அளவிற்கு அன்பு உலகில் உயர்ந்து நிற்கிறது. அன்பு மிக சக்தி வாய்ந்தது. அன்பினால் சாதிக்க முடியாதது இவ் உலகில் எதுவுமில்லை எனலாம். அன்பு விருப்பு வெறுப்பு அற்றது.

அன்பு குடிகொண்ட மனிதனிடத்து **தெய்வீகம், கருணை, அகிம்சை, சத்தியம், தர்மம், நாணயம், பொறுமை, சகிப்புத் தன்மை,** போன்ற உயர்ந்த குணங்கள் காணப்படும். எமது எண்ணங்கள் எல்லாம் அன்பின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். பேச்சிலும், செயலிலும் அன்பு வெளிப்பட வேண்டும்.

**“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்**

**என்பும் உரியர் பிறர்க்கு”**

என்று வள்ளுவப் பெருமான் கூறியுள்ளார். ஒரு பிள்ளைக்கு தாய்தந்தையர்தான் சிறு பராயத்திலிருந்து அன்பை ஊட்டி வளர்க்க வேண்டும். பெற்றோர்கள் அன்பு உள்ளவர்களாக இருந்தால் அவர்களின் பிள்ளைகளும் அன்பு உடையவர்களாகவே வளர்வார்கள்.

ஆனந்தமான வாழ்க்கைக்கு அன்பு அடித்தளமாக இருக்க வேண்டும். எனவே மாணவர்களாகிய நாம் எல்லோரிடத்தும் அன்பாக இருந்து எம்மையும் எமது நாட்டையும் ஆனந்தமயமாக்கி இன்புற்று வாழ்வோமாக.

**நன்றி வணக்கம்.**

# வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au


**ஆண்டு 5** **போட்டி நடைபெறும் திகதி : 15 May 10 (4:30pm – 5:30pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## பொறுப்புணர்வு

பொறுப்புணர்வு என்பது கடமையுணர்வு என்றும் பொருள்படும்.

நமக்கிருக்கும் கடமைகளோடு தரப்படும் கடமைகளை பொறுப்போடு செய்து முடிக்கும் உணர்வு எப்போதும் எமக்கு இருக்க வேண்டும்.

எந்த ஒரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய நல்ல பண்புகளில் பொறுப்புணர்ச்சி முக்கியமான ஒன்று. தன் கடமைகளைத் தட்டிக்கழித்து பொறுப்பை உணராமல் இருத்தலாகாது. பொறுப்புணர்வு இல்லாமல், எக்காரியத்தைச் செய்தாலும் அக்காரியம் முழுமை அடைந்தது என்று சொல்ல முடியாது.

நாம் நமது பொறுப்புகளை அதன் முக்கியத்தை உணர்ந்து, உண்மையுடனும், நேர்மையுடனும் செய்து முடிக்க வேண்டும். அது நமக்கு மிகுந்த மனநிறைவைத்தரும். நாம் செய்யும் எந்தச் செயலையும் முழுமையான ஈடுபாட்டுடன் செய்தால் அதிக பலன் கிடைக்கும்.

இதை வள்ளுவர்

**“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**

**திண்ணியர் ஆகப் பெறின்.”** எனும் குறளில் எடுத்துக் கூறுகிறார்.

அதாவது ஒரு செயலைச் செய்து முடிக்க எண்ணுபவர், எண்ணியவாறே செயலாற்றுவதில் உறுதியுடையவராக இருப்பாராயின், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவார்.

மாணவர்களாகிய எமக்கு இருக்கும் முக்கிய பொறுப்பு எமது மொழியையும், இனத்தையும், எம் கலை கலாசாரத்தையும், பண்பாடுகளையும் அழிய விடாமல் காப்பாற்றிக் கொள்வதே.

மாணவர்களாகிய நாம் அதனை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வாழ்க்கையில் வெற்றியும் மகிழ்ச்சியும் காண்போம்.

நன்றி. வணக்கம்.

# வென்றிவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au


**ஆண்டு 6** **போட்டி நடைபெறும் திகதி : 22 May 10 (1:30pm – 2:00pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## மகாத்மா காந்தி

காந்தியடிகள் வட இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் 1869ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி பிறந்தார். இவருக்குப் பெற்றோர் மோகனதாஸ் காந்தி எனப் பெயரிட்டனர். இவர் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமருள் ஒருவர்.

உண்மை பேசுபவராகவும், பெற்றோருக்குப் பணிந்து நடப்பவராகவும், நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிப்பவராகவும் விளங்கினார். இவருக்கு சிறு பிராயத்திலேயே அக்கால வழக்கப்படி பெற்றோர் கஸ்தூரிபாயைத் திருமணம் செய்து வைத்தனர். இவர் 'பாரிஸ்டர்' பட்டம் பெற இங்கிலாந்து சென்ற போது தாயார் கூறிய அறிவுரைகளில் 'மது அருந்தாதே, பொய் சொல்லாதே' என்பன முக்கியமானவையாகும்.

இந்தியா அந்நியருக்கு அடிமைப்பட்டு தாழ்வுற்று இருப்பதைக் கண்டு சத்தியாக்கிரக வழியில் நின்று, நாடு விடுதலை பெற முனைந்து அதில் வெற்றியும் கண்டார். பலமுறை சிறை சென்றார். அஹிம்சை ஓர் இணையற்ற சக்தி வாய்ந்த ஆயுதம் என உணர்ந்து அன்புவழியில் நின்று இந்திய நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி இந்திய சுதந்திரக் கொடி ஏற்றப்பட்டது.

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயம் செய்து விடல்"**

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய வாழ்ந்து காட்டிய மகான் காந்தியடிகள் ஆவார். இவர் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் மகான் ஆவார். பாரதநாடு மட்டுமல்ல முழு உலகமுமே இவரைப் போற்றுகின்றது. இவரின் பெயரால் பாரதத்திலும் இலங்கையிலும் இயங்கிவரும் சேவை நிலையங்கள் இன்னும் இவருடைய பணிகளை நினைவுறுத்துகின்றன.

நன்றி. வணக்கம்.

# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au


**ஆண்டு 7** **போட்டி நடைபெறும் திகதி : 22 May 10 (2:00pm – 2:45pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## தமிழரின் உடைப் பண்பாடு

ஒரு இனத்து மக்களின் நடை, உடை பாவனைகள் அவ்வினத்து மக்களின் தனித்துவமான அடையாளத்தை, பண்பாட்டைக் காட்டி நிற்கின்றன. உடையானது எப்போதும் உடலை மறைத்து, பண்பை, மானத்தைப் போற்றத்தக்கதாக இருக்க வேண்டும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேல் நெய்து, துணி செய்து உடை உடுக்கத் தெரிந்த ஒரு பண்பாட்டின் சொந்தக்காரன் தமிழன்.

சங்க காலத்தில் பருத்தி பயிர் செய்வதும், நூல் நூற்பதும், துணி நெய்வதும், ஆடை விற்பதும் ஒரு தொழிலாக நடந்திருக்கிறது. அரசர், அரசனைச் சார்ந்தோர், வணிகர் பட்டுத் துணிகளை விரும்பிய போதும், சாதாரண மக்கள் தங்கள் நில வெப்பத்திற்கு உகந்த வெள்ளை நிறப் பருத்தி ஆடையையே விரும்பினர். சங்க இலக்கியமான தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும் உடை பற்றிய குறிப்புக்கள் பல உள்ளன. தொல்காப்பியர் காலத்திலேயே இடுப்பில் உடுத்துகிற ஆடையை நெய்து உடுத்திருக்கின்றனர் தமிழர்.

" **உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே**

**இடுக்கண் களைவதாம் நட்பு**" என்ற குறளில், திருவள்ளுவர்,

இடையில் உள்ள ஆடை விலகும் போது, அதனை உடனே சரி செய்யும் கை போல நண்பனுக்கு துன்பம் வந்தால் உதவுவதே நட்பு என்கிறார். ஔவையார் "நல்வழி" யில், "உண்பது நாழி. உடுப்பது நான்கு முழம்" என்றார். புறநானூறில் "பருத்தி" பற்றி பல பாடல்களில் பேசப்படுகிறது. எனவே தமிழரின் உடைப் பண்பாட்டின் வயது மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலானது என்பதில் ஐயமே இல்லை.

தமிழ் அறிஞர்களின் ஆய்வுப்படி, சங்க காலத்தில் 210ற்கும் மேலான ஆடைகள் தமிழர்களால் அணியப்பட்டன. பழந்தமிழர் தமக்கென தனித்துவமான உடைப் பண்பாட்டோடு கடல் கடந்து ரோம் வரை போயினர் என்ற வரலாறு உங்களுக்கு வியப்பாய் இருக்கலாம். எமது பாரம்பரிய உடையில் தமிழரின் தன்னம்பிக்கை, அடையாளம் போன்றவை வெளிப்படுகின்றன. இதனால்தான் எமது இனத்தின் பாரம்பரியத்தைக் காக்க உடைப் பண்பாடு அவசியமாகிறது.

எனவே வீட்டில், விழாக்களில், குடும்ப நிகழ்வுகளில் பாவாடை, சட்டை, வேட்டி, சேலை போன்ற உடைகளோடு முன்னின்று தமிழரின் அடையாளத்தைக் காப்போமாக. வாழ்க தமிழ்.

**நன்றி வணக்கம்**

# வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au


**ஆண்டு 8** **போட்டி நடைபெறும் திகதி : 22 May 10 (2:45pm – 3:45pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## சூழல் பாதுகாப்பு

இன்று உலக நாடுகள் எல்லாம் அபிவிருத்திப் பாதையில் போட்டி போட்டு முன்னேறிக் கொண்டிருக்கினறன. பொருளாதாரம். மருத்துவம், கல்வி மற்றும் தொழில் நுட்பம் என்று பல துறைகளில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றன.

இதனால் வரும் நன்மைகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், சூழல் சமநிலை தொடர்பான பிரச்சனைகளையும் சற்றுச் சிந்தித்துப் பாாக்க வேண்டும்.

பறவைகளின் இனிய பாடல்கள் கேட்கும் அழகிய சோலைகளும், குளிர்மை தரும் நீர் ஊற்றுக்களும், நிறைந்த இயற்கைக் காட்சிகள் இன்று, வானைத் தொடும் உயர்ந்த கட்டடங்களாகவும் தீய வாயுக்களைக் வெளியேற்றும் தொழிற்சாலைகளுமாக மாறியுள்ளன.

தொழிற்சாலைக் கழிவுகள், அணுக்கதிர் வீசல்கள், நச்சு வாயுக்கள் நம் சூழலை மாசுப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இதுவே ஓசோன் படைகள் அகன்றமை, வெப்பநிலை அதிகரிப்பு, கடல் நீர் மட்ட உயர்வு, திடீர் காலநிலை மாற்றங்கள் ஆகியவற்றிற்கு காரணமாகும். மற்றும் ஓசோன் படைகள் நலிவடைவதால் பூமியின் மேற்பரப்பை வந்தடையும் சூரியனின் புற ஊதாக் கதிர்களே தோல் புற்று நோய்க்கு காரணமாகும்.

சிறுவர்களாகிய நாம் இப் பாதிப்புகளை மனதில் வைத்து புதிய மரங்களை பெருமளவில் நாட்டி, நீரையும் மின்சாரத்தையும் குறைந்தளவில் பாவித்து சூழலைப் பாதுகாப்போம்.

நவீன தொழில் நுட்ப சாதனங்களை அதிகளவில் பாவிப்பது உடலுக்கும் சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகையால் அவற்றை அளவோடு பாவித்து பயனடைவோம்.

எமது உடலில் சூரிய ஒளியின் பாதிப்பை தவிர்க்க தக்க ஆடைகள் அணிவோம். பொருட்களை மீண்டும் பயன் படுத்துவதன் மூலம் குப்பை சேர்வதைத் தடுப்போம்.

விழிப்புணர்வுடன் நடந்து சூழலை பாதுகாப்பதற்கு எம்மால் ஆன உதவிகளைச் செய்வோம்.

சூழலைப் பாதுகாத்து நமக்கும் நம் அடுத்த சந்ததியினருக்கும் ஓர் நல்ல எதிர் காலத்தை உருவாக்குவோமாக.

**நன்றி வணக்கம்**

# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au


**ஆண்டு 9** போட்டி நடைபெறும் திகதி : **22 May 10 (3:45pm – 4:45pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## வள்ளுவன் வழி

வள்ளுவம் தமிழனின் வாழ்க்கை முறை.தமிழனின் பண்பாடு.தமிழ் செல்வம்.சிறந்த வாழ்க்கை நூல். நல் வழிகாட்டி.
பண்பட்ட உள்ளம் கொண்டவர் பண்பாடு உடையவர் ஆவார்.உள்ளத்தினின்று வெளிப்படுவன அத்தகைய இயல்புகள்.சொல்லாலும் செயலாலும் அவை வெளிப்படும். ஒருவரின் குணம்,நடத்தைகள்,இயல்புகள், நம்பிக்கைகள்,மற்றவர்களோடு பழகும் முறை,வாழ்க்கையைப் பற்றிய அவரின் எண்ணம்,சிந்தனைகள், விழுமியங்கள் இவைகள் எல்லாம் உள்ளத்தினின்றும் எழும் இயல்புகள்.அவை பண்பாடாகும்.

அப்படியென்றால் தமிழனுடய பண்பாட்டு வாழ்க்கை முறை தான் என்ன? திருக்குறளை இயற்றிய வள்ளுவர் 1330 சொற்செறிவுள்ள ஒன்றே முக்கால் அடிப் பாடல்களில் அழகாக அதனைப் பாடியுள்ளார். அன்போடும் அறத்தோடும் வாழும் வாழ்வு நமது என்கிறது அந்தத் திருக்குறள் என்னும் தமிழ் மறை.
விருந்தினரை உபசரித்தல்,இனிய வார்த்தைகளைப் பேசுதல்,செய் நன்றி அறிதல்,நடுவு நிலைமையோடிருத்தல்,அடக்கம், ஒழுக்கம்,பொறுமை, வெகுளாமை,கொல்லாமை, பொறாமை கொள்ளாமை,மற்றவர்களை இகழாமை,மன ஒருமைப்பாடு,தர்மத்தின் வழி நிற்றல்,பிறர் பொருளுக்கு ஆசை கொள்ளாமை,தீயனவும் பயனற்றதுமான வார்த்தைகளைப் பேசாமை,ஈகை,வாழ்வின் நிலையாமையை உணர்தல், இரக்கம்,ஒப்புரவு,வாய்மை - இவைகள் வள்ளுவம் கூறும் அறங்களாகும்.

இவற்றை அன்போடு செய்தலே தமிழனின் பண்பாடாகும். அவை எக்காலத்துக்கும் எவ்வுயிர்க்கும் எப் பருவத்துக்கும் பொருந்திப் போவன.அப்படியென்றால் குறிப்பாக மாணவர்களகிய எமக்கு அவர் என்ன கூறுகிறார்?

**"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் - அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

என்று கூறுகிறார்.இதன் பொருள் என்னவென்றால்,எந்த ஒரு விடயம் பற்றியும் யார் யார் எவ்வாறு எடுத்துக் கூறினாலும் கூறியவர் யார் என்பது பற்றி யோசிக்காமல் கூறப்பட்ட விடயத்தில் இருக்கின்ற உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிவதே உண்மையான அறிவு என்பதாகும். அதனால்,அறிவுத் தேட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணாக்கர்களாகிய நாம் வள்ளுவன் வழி நின்று அன்போடும் அறத்தோடும் மெய்ப்பொருள் கண்டு வாழ்வோம்.

**"வெள்ளத் தனைய, மலர் நீட்டம்; மாந்தர் தம்**
**உள்ளத்து தனைய துயர்வு"**

நன்றி வணக்கம்

# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au

**ஆண்டு 10** **போட்டி நடைபெறும் திகதி : 22 May 10 (4:45pm – 5:00pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## இளைய சமுதாயத்தினருக்கு வள்ளுவரின் நன்நெறிகள்

இருபத்தோராம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சி காரணமாக சமுதாய அமைப்புகளில் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பழைய மரபுகளும் சிந்தனைகளும் உடைக்கப்பட்டு புதிய சித்தாந்தங்களும் புதிய மரபுகளும் படைக்கப்பட்டுள்ளன.

இளைய தலைமுறையினருக்கு பணம் சம்பாதிப்பதே முக்கிய குறிக்கோளாக மாறி விட்டது. அத்துடன் அவர்கள் பல பிற சமுதாயங்களுடன் கலந்து வாழ்வதால், அவர்கள் எமது கலாசாராத்தை மறந்து பிற கலாசாரங்களில் அதிக நாட்டம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். ஆகவே அவர்களுக்கு திருவள்ளுவரின் வாழ்வியல் நெறிகளை நினைவூட்ட வேண்டிய கால கட்டத்தில் நாம் உள்ளோம்.

அன்பு என்பது வாழும் உயிர்களுக்கு பொதுவான ஒன்றாகும். இந்த இயற்கையான உணர்வில்தான் 'மனிதப் பிறவி' உயர்ந்தது என்றால் மிகையாகாது.

**“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**

**என்பும் உரியர் பிறர்க்கு”**

அதாவது அன்பு இல்லாதவர் எல்லாப் பொருட்களையும் தமக்கே உரிமையாக்கிக் கொள்வர் என்றும் அன்பு உள்ளவர் தமக்கு உரிய எல்லாவற்றையும் பிறருக்கு உரிமையாக்கி வாழ்வார் என்றும் திருவள்ளுவர் கூறுகிறார்.

அத்துடன் இன்றைய சமுதாயத்தில் இளைஞர்கள் தாம், தம் செயல் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தாம் செய்யப் போகின்ற செயல் மற்றவர்களுக்குப் புகழையும் நன்மையையும் தருமா என்று ஆராய்ந்து செயலில் ஈடுபட மறந்து விடுகிறார்கள். அது தவிர புகழும், நன்மையும் தராத காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும். என்பதை வள்ளுவர் பின்வரும் குறளில்

**“என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**

**நன்றி பயவா வினை”** என்று கூறுகிறார்.

இன்றைய இளைய சமுதாயத்திற்கு என்ன அறிவுரை சொன்னாலும் அது அவர்களுக்கு சினத்தை ஏற்படுத்துகிறது. சினத்தை விடப் பெரிய பகை வேறு ஒன்றுமில்லை. எவன் ஒருவன் சினம் வராமல் மனத்தை கட்டுப்படுத்துகிறானோ அவனே பூரண மனிதனாவான். தவறினால் சினம் அவனையே கொன்று விடும். அதைத்தான் வள்ளுவர்,

**“தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கால்**

**தன்னையே கொல்லும் சினம்”** என்று அழகாக கூறுகிறார்.

மேலும் திருவள்ளுவர் இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவி இருவரும் ஒருவருடன் ஒருவர் மிக அன்பாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். எதைச் செய்தாலும் தரும நியாயாங்களின் அடிப்படையில் செய்தால் அது இல்வாழ்க்கையில் தருமம் என்று கூறுகிறார்.

இன்றைய இளம் சமுதாயத்தினர் அதைப் பொன்மொழியாகக் கொண்டு வாழ்ந்து தமக்கும் உலகத்திற்கும் நல்ல மனிதனாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

வள்ளுவனின் நன்னெறிகளைக் கற்று அதற்குத் தகுந்த படி தம்மை மாற்றி நல்ல இளைய சந்ததியினராக வாழ்ந்து அடுத்த தலைமுறையினர்க்கு முன்மாதிரியாக இருத்தல் வேண்டும்.

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப்படும்”**

நன்றி. வணக்கம்.

## வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Email: info@wtsc.org.au Web: http://www.wtsc.org.au

**ஆண்டு 11 போட்டி நடைபெறும் திகதி :22 May 10 (5:00pm –5:30pm)**

நடுவர்களுக்கும் சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

### இளையோரும் தொழில்நுட்பவியலும்

கடந்த பத்து ஆண்டுகளில் தொழில்நுட்பவியல் பெருவளர்ச்சி அடைந்துள்ளது. இன்னும் வளர்ந்து கொண்டே செல்கிறது. இந்த தொழில்நுட்பத்தைச் சார்ந்த இலத்திரன் சாதனங்களை சகல வயதினரும் பயன்படுத்தி வருகின்றபோதும் இளையோரே பெருமளவில் பயன்படுத்துவது வழக்கம். பலவிதமான இலத்திரன் சாதனங்கள் உள்ளபோதும் இங்கு காவிச்செல்லும் தொலைபேசி, இணையம் அதனோடு chatting எனப்படும் அளவளாவுதல் போன்றவற்றை எடுத்துக்கொள்வோம்.

காவிச்செல்லும் தொலைபேசியினால் நிறைய நன்மைகள் உள்ளன. பிள்ளைகள் வீட்டுக்கு வெளியே செல்லும் சந்தர்ப்பங்களில் பெற்றோர் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் எப்போது வீட்டுக்கு வருவார்கள். என்பதை அறிந்து ஆறுதல் கொள்ள முடிகிறது. அத்துடன் ஆபத்து, அல்லது அவசர சந்தர்ப்பங்கள் எழும்போது பெற்றோருடனோ, காவற்றுறையினரோடோ அவசர சேவைகளுடனோ தொடர்பு கொள்ள முடிகிறது. அதேநேரம் பிள்ளைகள் தவறான முறையிலும் அளவுக்கதிகமாகவும் இந்த தொலைபேசிகளைப் பயன்படுத்தாமலிருப்பதைப் பெற்றோர் உறுதிப்படுத்துதல் வேண்டும். அளவுக்கு அதிக பயன்பாடும் கட்டடங்களின் உள்ளே பயன்படுத்துவதும் ஆபத்தை ஏற்படுத்தும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 10 வருடங்களுக்கு மேலாக காவிச்செல்லும் தொலைபேசியைப் பயன்படுத்துவோருக்கு மூளையில் புற்றுநோய் உருவாவதற்கான சந்தர்ப்பங்கள் இரண்டு மடங்காகுகிறது. என்றும். அஸ்பெஸ்ரஸ், புகைத்தல் ஆகியவற்றால் வரக்கூடிய ஆபத்துகளைவிட இதன் பாவனையால் வரும் ஆரோக்கியக்கேடுகள் அதிகம் என்றும் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Dr Vini Kurana எச்சரித்துள்ளார்.

அடுத்து இணையத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளைப் பார்ப்போம். இணையத்தில் கோடிக்கணக்கான தகவல்கள் செய்திகள், ஆய்வுகள், கட்டுரைகள் சஞ்சிகைகள், பத்திரிகைகள் சினிமா எனப் பலவகை விஷயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. தினமும் அவற்றின் தொகை அதிகரித்து வருகிறது. இவற்றில் பலவற்றின் நம்பத்தன்மை கேள்விக்குரியது. ஆயினும் பல்வேறு விஷயங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கு இது உதவுகிறது என்பதில் சந்தேகமில்லை. அதே நேரம் மிகத் தவறான அல்லது தீமை தருகின்ற விஷயங்களும் உள்ளன. அவற்றை இளையோர் பார்த்துக் கெட்டுப் போவதற்கான சாத்தியங்கள் உள்ளன. அத்துடன் chatting என்பது மிக ஆபத்தான நிலைகளுக்குப் பிள்ளைகளை எடுத்துச் செல்லக்கூடியது. முகந் தெரியாது தம்முடன் அளவளாவிய குற்றவாளிகளால் பெண் பிள்ளைகள் ஆபத்துக்குட்பட்ட கதைகளை நிறைய அறிகிறோம். எனவே பிள்ளைகள் முகம் தெரியாதவர்களுடன் அளவளாவும்போதும் தமது தனிப்பட்ட தகவல்களை வழங்கும் போதும் மிக அவதானமாக இருக்கவேண்டியது அவசியம்.

பல நன்மைகளும் தீமைகளும் கலந்துள்ள இந்த இலத்திரன் சாதனங்களை அவதானத்துடன் பயன்படுத்துவதும் அதிலுள்ள நல்லவற்றை மட்டும் எடுத்துக் கொள்ளப் பழகுவதும் மிக முக்கியமாக நாம் கருத்தில் கொள்ளவேண்டிய விஷயங்களாகும்.

நன்றி வணக்கம்